செ.வெ.எண். 11/மார்ச்                                                                                    தேதி : 06.03.2017

# தருமபுரி மாவட்டம்  ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதியதாக அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்து பின்னர் திறந்தவெளி கிணறு ஆழப்படுத்தி சுற்று சுவர் அமைத்தல் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள்  தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பூமி பூஜை செய்து திட்ட பணிகளை துவக்கி வைத்தார்.



தருமபுரி மாவட்டம், கொண்டம்பட்டி பஞ்சாயத்து, கர்த்தானூர் மற்றும் பாலக்கோடு வட்டாரம், மல்லாபுரம் பஞ்சாயத்து கடத்திக்கொள்மேடு ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதியதாக அங்கன்வாடி மையத்தினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

முன்னதாக தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பேளாரஅள்ளி ஊராட்சி, அ.மல்லாபுரம் ஊராட்சி பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கும் பொருட்டு ரூ. 8.34 இலட்சம் மதிப்பில் திறந்தவெளி கிணறு அழப்படுத்தி சுற்று சுவர் அமைக்கும் பணிக்கும் மற்றும் ரூ. 15.00 இலட்சம் மதிப்பில் அ.மல்லாபுரம் அருகே சின்னாற்றில் புதிய திறந்தவெளி கிணறு, பைப்லைன் மற்றும் மின் மோட்டார் பொருத்துதல் ஆகிய பணிகளுக்கு பூமி பூஜை செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, பாலக்கோடு வட்டாட்சியர் திரு. அதியமான், மாவட்ட திட்ட அலுவலர் திருமதி. புஷ்பலதா, வட்டார குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி. க. பாப்பாயி, பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு. கே.வி. அரங்கநாதன், முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர்கள் திரு. தொ.மு. நாகராஜன், டி.ஆர். அன்பழகன், மாவட்ட கூட்டுறவு

நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர் திரு. எம். பழனிசாமி, ஜெர்த்தலாவ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. வீரமணி உட்பட துறை ரீதியான அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.